IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.
DEPOSITION OF WITNESS

(As per XXIII case of Criminal procedure)

SESSIONS CASE NO. 45/2024

Deposition of witness for prosecution : PW2

Defense :

Name : முனியப்பன்

Father's Name : கிருஷ்டன்

Village : களம்பூர்

Taluk :

Caste :

Calling : கம்பி கட்டும் வேலை

Religion :

Age : 44

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.08.2025.

**முதல் விசாரணை**

**எதிரி ஆஜர்.**

1. நான் தற்போது களம்பூரில் வசித்து கம்பி கட்டும் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது தாயார். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு இரவு நேரத்தில் நான் தூங்கிக்கொண்டு இருந்த போது ஆஜர் எதிரியான எனது தம்பி கத்தியால் எனது தலையில் முன்பக்கத்தில் அடித்துவிட்டார். எதிரி என்னை சாப்பாடு செய்ய சொன்னார் நான் செய்யவில்லை எதிரி குடித்து இருந்தார் என்னை அடித்துவிட்டார். நான் மயக்கமாக இருந்தேன் என்னை பக்கத்தில் இருந்தவர்கள் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். எனது அம்மா வந்து பார்த்தார்கள். போலீசாரிடம் புகார் அளிக்க கைரேகை அளித்தார்கள். எனது தம்பி என்னை அடித்துவிட்டதாக எனது அம்மா கொடுத்த புகாரின் பேரில் தான் வழக்கு நடக்கிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் இரும்பு சட்டத்தால் தான் எனது தம்பி என்னை அடித்தார். (அந்த இரும்பு சட்டம் **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) அடிபட்டு நான் படுத்திருந்த வெள்ளை நிற தலையணை உறை தான் என்னிடம் காட்டப்படும் தலையணை உறை ஆகும். (அந்த தலையணை உறை **சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) இது சம்மந்தமாக களம்பூர் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் அடிப்பட்டு அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் இருந்தபோது எத்தனை நாட்கள் கழித்து எனது தாயார் என்னை வந்து பார்த்தார் என்றால் 2 நாட்கள் கழித்து பார்த்தார். எனது தாயார் எந்த இடத்தில் புகார் வாக்குமூலம் கொடுத்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு மயக்கம் தெளிந்த பிறகு போலீசார் என்னிடம் எழுத்து மூலமான புகார் வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் இல்லை. வழக்கு சொத்தாக போலீசார் என்ன பொருட்களை கைப்பற்றினார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னை யார் அடித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சா.பொ.1 இரும்பு சட்டத்தால் தான் எனது தம்பி என்னை அடித்தாரா என்றால் நான் தூங்கிக்கொண்டு இருந்தேன் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிக்கும் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயம் ஆஜர் எதிரியால் ஏற்பட்டது என்று என்னால் உறுதியாக சொல்லமுடியாது என்றால் சரிதான்.